# இரண்டாம் தவணைப் பரீட்சை-2023

## சைவநெறி

## தரம்-08

### பகுதி-I

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.** **நேரம்-1.30மணித்தியாலயம்**

01.கடவுளின் உண்மைத் தன்மை பற்றி கூறும் உபநிடதம்
1.கடஉபநிடபம் 2.கேணஉபநிடம்
3.சாந்தோக்கியஉபநிடதம் 4.மாண்டுக்கியஉபநிடதம்

02.ஆலய அமைப்பில் மார்பு குறிப்பது
1.இராஜகோபுரம் 2.சிரசு
3.அர்த்த மண்டபம் 4.மகாமண்டபம்

03.சூக்கும லிங்கம் என அழைக்கப்படுவது
1.கோபுரம் 2.மூலமூர்த்தி
3.பரிவாரத்தேவர்கள் 4.கொடித்தம்பம்

04.நமஸ்காரம் பண்ணும் போது கால்கள் நீட்ட வேண்டிய திசைகளாக அமைபவை
1.வடக்கு தெற்கு 2.கிழக்கு மேற்கு
3.மேற்கு தெற்கு 4.மேற்கு வடக்கு

05.இலிங்கோற்பவ காலமாக அமைவது
1.இரவு11.30 முதல்2.15வரை 2.இரவு11.45 முதல்12.30வரை
3.இரவு12.00 முதல்12.30வரை 4.இரவு9.45 முதல்10.45வரை

06.நாள் மங்கலம் என்பதில் ‘‘மங்கலம்’’ குறிப்பது
1.நட்சத்திரம் 2.ஒழுக்கம்
3.ஆக்கம் 4.சந்திரன்

07சைவர்கள் கோயில் என சிறப்பிக்கும் தலமாக அமைவது
1.காசி 2.தஞ்சைபெரியகோயில்
3.சிதம்பரம் 4.ஸ்ரீரங்கம்

08சூரிய பகவான் மேடராசியில் பிரவேசிக்கும் நாளில் கொண்டாடப்படும் பண்டிகை
1.தைப்பொங்கல் 2.ஆடிப்பிறப்பு
3.சித்திரை வருடப்பிறப்பு 4.தீபாவளி

09.உடுப்பூர் எனும் ஊரில் அவதரித்தவர்
1.சம்பந்தர் 2.நாவுக்கரசர்
3.சுந்தரர் 4.திண்ணனார்

10.திருமருகலில் உறையும் இறைவி பெயர்
1.பார்வதி அம்பாள் 2.கௌரிஅம்பாள்
3.வண்டுவார்குழலி அம்மையார் 4.மாதுமையம்மாள்

11.அப்பர் திருமறைக்காட்டு ஆலயகதவு திறப்பதற்கு பாடிய பாடலாக அமைவது
1.’’பண்ணின் நேர்மொழியாள்........’’ 2.’’பெருகலாம் தவம்..........’’
3.’’கற்றாங்கு எரியோம்பி............’’ 4.’’நீள நினைந்து அடியேன்.......’’

12.உபவாசம் என்பதன் பொருளாக அமைவது
1.தியானம் 2.இறைவனின் அருகில் வசித்தல்
3.உணவை விடுத்திருத்தல் 4.விழித்திருத்தல்

13.விசாகன் என்று அழைக்கப்படும் கடவுள்
1.சிவபெருமான் 2.விநாயகர்
3.விஷ்ணு 4.முருகன்

14.’’நீளநினைந்து அடியேன்....’’ எனும் பதிகத்தின் பண்
1.குறிஞ்சி 2.நட்டராகம்
3.பழம் பஞ்சுரம் 4.கொல்லி

15.பதினெண் புராணங்களுள் சிவபுராணங்களின் எண்ணிக்கை
1.10 2.4 3.8 4.15

16.”வன்றொண்டர்” என அழைக்கப்படும் நாயனார் யார்?

1.திருநாவுக்கரசர் 2.சம்பந்தர்
3.சுந்தரமூர்த்தி நாயனார் 4.மாணிக்கவாசகர்

17.திருநாவுக்கரசரும்,திருஞான சம்பந்தரும் படிக்காசு பெற்ற தலம்

1.திருமறைக்காடு 2.சிதம்பரம்
3.திருவீழிமிழலை 4.சீர்காழி

18.அரிமர்த்தன பாண்டிய மன்னனுக்கு முதலமைச்சராக விளங்கியவர்

1.மணிவாசகர் 2.சம்பந்தர்
3.அப்பர் 4.சுந்தரர்

19.திரிகரணங்கள் எனப்படுபவை

1.மனம்,சித்தி,புத்தி 2.மனம்,வாக்கு,காயம்
3.அறம்,பொருள்,இன்பம் 4.நீர்,நிலம்,ஆகாயம்

20.மின்காந்த அலைகளை ஈர்க்கும் சக்தியை கொண்டது

1.தலவிருட்சம் 2.விக்கிரம்
3.கோபுரம் 4.கலசம்

(20*2= 40புள்ளிகள்)

## பகுதி-II

**1ம்2ம் வினா உட்பட 5 வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

01.சுருக்கமான விடை தருக.

1. இறைவனது உண்மைத் தன்மை பற்றி கூறும் நூல்கள் 3தருக?
2. பசு என்பது எதைக் குறிக்கின்றது?
3. ஆலயத்தில் செய்யப்படும் நமஸ்காரங்கள் யாவை?
4. பன்னிரு வருடங்களுக்கு ஒருமுறை இடம்பெறும் கிரியை 2 தருக?
5. சிவராத்திரி வகைகள் 2தருக?
6. வாழ்வியல் சடங்குகள்3 தருக?
7. திண்ணனாரின் நண்பர்கள் யார்?
8. திருத்தொண்டர் தொகையைப் பாடியவர் யார்?
9. “பூழியர்கோன் வெப்பு ஒழித்த புகழியர்கோன் கழல் போற்றி” எனும் பாடல் விளக்கும் நாயனார் யார்?
10. ஐந்தொழில்களுக்கு வழங்கப்படும் மறுபெயர் யார்?

(10*2= 20புள்ளிகள்)

02.பின்வரும் பதிகங்களில் இரண்டினை அடிமுறை பிழையறாது திருத்தமாக எழுதுக

1. “கற்றாங்கு எரியோம்பி.........”
2. “பெருகலாம் தவம் பேதைமை........”
3. “பண்ணின் நேர் மொழியாள்......”
4. “நீள நினைந்து அடியேன்.......”
5. “மண்ணில் நல்ல வண்ணம்.....”

(3+1+1=(5*2)= 10புள்ளிகள்)

03.1.புராணம் என்றால் என்ன?

2.சிவன் நஞ்சு உண்ட கதையை விளக்கும் திருமுறைப்பாடலடிகள் 3தருக?

3.இராவணனை சிவபெருமான் தனது பெருவிரலால் மலையை பயன்படுத்தி நசிப்பதற்கு காரணம் யாது?

(3+3+4= 10புள்ளிகள்)

04.1.விரதம் என்றால் என்ன?
2.பங்குனி உத்தரத்திருவிழா இலங்கையில் சிறப்பாக நடைபெறும் தலங்கள் யாவை?
3.விரதம் அனுஷ்டிக்கும்போது கடைபிடிக்கும் பொதுவான விதிமுறைகள் 4 தருக?

(3+3+4= 10புள்ளிகள்)

05.1.விழுமியம் என்றால் என்ன?
2.விழுமியப் பண்புகள் 4 தருக?
3.கொடையால் உயர்ந்தவர்கள் நால்வரைத் தருக?

(3+3+4= 10புள்ளிகள்)

06.1.கடவுள் என்பதன் பொருள் யாது?
2.இறைவனது இயல்புகள் 4 தருக?
3.ஐந்தொழில்களைக் குறிப்பிடுக?

(3+3+4= 10புள்ளிகள்)

07.எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு வரைக
1.சிவராத்திரி
2.நாள்மங்கலம்
3.பண்டிகை
4.இயற்கையைப் பேணுதல்
5.திருஞான சம்பந்தர்

(5*2= 10புள்ளிகள்)